
ஆன்மீகச் சிற்றிதழ் 20

# சிவஒளி

- 2016 -

ஆசிரியர்
திருமலை சுந்தா



துர்முகி

புத்தாண்டு

வாழ்த்துக்கள்

20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயோர் நேசத்தை விட
தனிமை மேலானது

அட்டைப்படம்: சிசு



அன்பு செய்
ஆனந்தித்திரு


# சிவனொளி

அம்மா பதிப்பகம்
31/1, சமாது ஒழுங்கை,
திருக்கோணமலை

சிற்றிதழ் - 20
சித்திரை - 2016


## இதழில்.......


- தமிழர் போற்றும் சித்திரைப் புத்தாண்டு
- பொலிக புத்தாண்டு
- இறைவனைத் தேடி
- எலி எலியாகவே மாறியது
- வீரமுருகன்
- இராஜகோபுரம்
- பழமொழிகளில் முருகன்


நற்றுணையாவது
நமசிவாயவே



## ஆசிரியரின் .............

சிவனொளி ஆன்மீகச் சிற்றிதழ் 'துர்முகி' என தன் பெயரைக் கூறிக்கொண்ட இவ்வாண்டு சிறப்பிதழாக பூத்திருக்கின்றது.

சுப நேரத்தில் மருத்து நீரைத் தலையில் வைத்து நீராடி புத்தாடை அணிந்து புதுப்பானையில் சூரியதேவனுக்கு பொங்கலிட்டு தமிழ் மக்கள் சித்திரை புத்தாண்டை கொண்டாடி மகிழ்வார்கள்.

சிவனொளி வாசக பெருமக்களும் இவ்வாண்டில் எல்லா நலனும் பெற்று மானுட நேயம் மிக்கவர்களாக மிளிர நாம் வாழ்த்துகின்றோம்.

வாசக பெருமக்களே புத்தாண்டு மகிழ்வோடு மறு இதழில் நாமும் பேசி மகிழ்வோம்.

அச்சு : ஏ.ஆர்.டிரேடர்ஸ் 0777695656



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் போற்றும் சித்திரைப்புத்தாண்டு

**பிரம்மஸ்ரீ சு.கிருஷ்ணகுமார் குருக்கள்**

பிரதம குரு - சிவன்தேவஸ்தானம். - திருகோணமலை.

சனாதன தர்மமாகிய இந்துமதத்தின் விரதங்கள் பண்டிகைகள் இரண்டுக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன.

பண்டிகை என்ற சொல் பெருநாள், விஷேட நாள் என்னும் பொருள்களைத் தருகின்றது. இச் சொல்லின் பொருளை இக்கால வழக்கை ஒட்டி வரையறுக்கும் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி "தாம் சார்ந்துள்ள சமயத்தில் முக்கியமானதாகக் கருப்பட்டு வருடத்தில் குறிப்பிட்ட நாளில் விருந்துடன் சிறப்பாகக் கொண்டாடப்படுவது" எனப் பண்டிகை என்ற சொல்லுக்கு வரைவிலக்கணம் தந்துள்ளது.

எனவே விரதத்தைப் போல் பண்டிகைக்கும் சமய முக்கியத்துவம் இருப்பினும், அவை இரண்டுக்கும் இடையே அடிப்படை வேறுபாடு இருத்தலை உணர்ந்து கொள்ளலாம் உணவை சுருக்குதல், ஒழித்தல் விரதத்தின் ஆதாரமாயிருக்க பலவகை உணவுகளைச் சிறுவர்கள், பெரியோர்கள், அயலவர்கள், நண்பர்கள்,கூடியுண்ணும் விருந்து வைபவமாகப் பண்டிகை விளங்குதல் குறிப்பிடத்தக்கது. மேலும் உறவினர் வீட்டு விஜயம் புத்தாடை அணிதல், கலை நிகழ்ச்சிகள் வாழ்த்து மடல்கள் அனுப்பல் போன்ற குதூகலச் செயற்பாடுகள் பண்டிகைகளில் அங்கங்கள் ஆகின்றன விரதங்களில் இத்தகைய கேளிக்கைகள் இடம் பெறுவதில்லை.

தைப்பொங்கல், தீபாவளி, சித்திரைப் புத்தாண்டு ஆடிப்பிறப்பு, ஓணம் பண்டிகை, காமன் பண்டிகை என்பன எமது மதத்தில் கொண்டாடப்படும் பண்டிகைகளாக உள்ளன.

இவற்றுள் ஓர் ஆண்டைக் கணிக்கும் முறைகளில் இரு கணிப்பு முறைகள் தென் பாரதத்தில் முக்கியமானதாக உள்ளன. அவை சௌரமானம். சாந்திரமதானம், என்பன ஆகும் இவற்றில் சௌரமானம் என்பது சூரியன் மேட ராசியிலிருந்து, மீனராசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையுள்ள பன்னிரு இராசிகளிலும் சஞ்சரிக்கும் காலங்களைச் சூரிய மாதங்களாகக் கணக்கிட்டு சித்திரை முதல் பங்குனி வரையுள்ள பன்னிரு மாதங்களைக் கொண்டதே ஓர் ஆண்டு எனக் கொள்ளும் முறையாகும். இது தமிழ் மக்களில் இந்துக்களும் பௌத்த சிங்கள மக்களும் பின்பற்றும் முறையாகும்.

சாந்திரமானம் அல்லது சாந்திர வருஷம் என்பது சந்திரன் சுற்றி வருவதால் வரும் சாந்திர மாதஙகள் கொண்ட வருடத்தை நிர்ணயிக்கும் முறை ஆகும். இது ஆந்திரப் பிரதேசத்திலும் பிற இடங்களிலும் வாழும் தெலுங்கு மக்கள் உகாதி என்னும பெயர் கொண்ட புத்தாண்டைக் கணித்துக் கொள்ளும் முறையாகும்.

சூரியன் மேட ராசியிற் புகும் தமிழ்ப் புத்தாண்டுப் பிறப்பிற்கு இரு முக்கியத்துவங்கள் உள்ளன. ஒன்று பிரம்மா சித்திரை மாத முதல் நாளில் தான் தனது படைப்புத் தொழிலைத் தொடங்கிதாக ஒரு புராண மரபு உள்ளது. அடுத்தது. வட திசை நோக்கிச் செல்லும் சூரியன் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் மூலஸ்தானத்தைக் கடந்து செல்லும் தினம் சித்திரை முதல் நாள் ஆகும்.

சித்திரைப் புத்தாண்டு பிறக்கும் சுப நேரத்தில் மக்கள் விஷேட தயாரிப்பான மருத்து நீரைத் தலையில் வைத்து நீராடல் புத்தாடை அணிதல், விஷேட வழிபாடு செய்தல் புதுப்பானையில் நியதிக்கு இணங்கப் பொங்கிய அன்னத்தைச் சூரியனுக்குப் படைத்தல் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளுக்குச் சுபதின சுபநேரத்தில் விஜயம் செய்தல் என்பன சித்திரைப் புத்தாண்டின் சம்பிரதாயங்கள் ஆகும்.

தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணு கிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பலி, சுக்கு இவைகளை சுத்தமான நீரில் காய்ச்சி எடுக்கும் மருத்து நீர் எமக்கு ஏற்படும் சங்கிரம தோஷங்களை நீக்க கூடியதாக உள்ளது. புத்தாண்டு அன்று இதனை தலையில் தேய்த்து நீராடுவது முக்கிய அம்ஸமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத்தவிர புத்தாண்டு பிறந்த பின் முதலில் அமையும் சுபதின சுபநேரத்தில் கை விஷேசம் பரிமாறல், புதுக்கணக்குப் பதிதல், நாள் வியாபாரம் தொடங்கல், ஏர்மங்களம், புது விதைப்பு புதிதெடுத்தல், வித்தியாரம்பம் என்னும் கருமங்களைத் தொடங்கும் வழக்கம் தமிழ் மக்களிடம் காலகாலமாக உள்ளது.

சில தசாப்தங்களின் முன்னர் போர்த் தேங்காய் அடித்தல் என்னும் பொழுது போக்கு விளையாட்டு தமிழ்க்கிராமங்களில் பெரு விழாவாகப் பின்பற்றப்பட்டது. மேலை நாட்டு விளையாட்டுக்கள் இளையோரிடம் பெரிதும் செல்வாக்குச் செலுத்தும். இக்காலத்திற் போர்த் தேங்காய் அடித்தல் அருகிவிட்டது. எனினும் இந்நாட்களில் இவ்விளையாட்டுடன் சருக்கு மரம் ஏறல், ஓட்டப் பந்தயம் போன்ற விளையாட்டுக்களும் நடைபெறுவது மகிழ்ச்சியைத் தருகின்றது.

இவ்வருடம் இச்சித்திரைப் புத்தாண்டு எதிர் வரும் 13.04.2016 புதன்கிழமை மாலை 6.36 மணியளவில் பூர்வபக்க ஸ்ப்தமி திதியிலும் திருவாதிரை நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் அதிகண்டம் நாமயோகத்தில் வணிசக் கரணத்தில் துலா லக்னத்தில், விருச்சிக நவாம்சத்தில் பிறக்கின்றது.

இவ்வாறான இச்சிறப்பு வாய்ந்து இப்புத்தாண்டில் தத்தம் வீடுகளில் சூரியனுக்குப் பொங்கல் பூசை வழிபாடு செய்து முன் போல போசண பூஷண தானதருமங்களில் ஈடுபட்டு மங்கள கரமான வாழ்க்கை வாழ வாழ்த்துகிறோம்.

---

- பல்வேறு மதங்களும் பைபிளும் வேதங்களும் கொள்கைகளும் சிறிய செடிக்கான தொட்டிகள் மட்டுமே. செடி பெரிதாக வளர வேண்டுமானால் தொட்டியை விட்டு வெளியே வந்தாக வேண்டும்.

- உலகப் பற்றை ஒழிக்க வேண்டும் என்று ஞானம் கூறுகிறதே தவிர உலகையே துறக்க வேண்டும் என்று கூறுவதில்லை.

- சுவாமி லிங்கேஸ்வரர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டென்பது காலத்தின் சுழற்சியில் கடந்த தூரத்தை அளவிடும் ஓர் எல்லைக்கல் அல்லது அளவுகோல் எனலாம்.

மனித இனம் தோன்றியது முதல் பற்பல சமூகங்களிலும் கலாச்சாரங்களிலும் பயணம், விவசாயம், இறைவழிபாடு, உண்பது, உறங்குவது மற்றும் எல்லாவற்றிற்கும் காலக் கணிப்ப இன்றியமையாதது.

நொடி, மணி, நாள், மாதம், ஆண்டு எனத் தோன்றி மறையும் காலம் நிலையற்றது. அதே சமயம் நில்லாது சுழன்று இரவு பகல், தேய்பிறை, வளாபிறை, பருவங்கள் ஆண்டுகள், யுகங்கள் எனச் சுழன்று வரும் காலச் சுழற்சி முடிவில்லாமலும் உள்ளது.

இதைக் காணும் ஆதி மனிதன் முதல் இன்றைய அறிஞர்கள், தத்துவஞானிகள் வரை யாவரையும் வியக்கச் செய்கிறது. காலத்திற்குள் தோன்றும் எல்லாம் அழிவுற்றாலும் காலம் மட்டும் அழியாது நிற்கிறது. இவ்வரிய தத்துவத்தையே காளியன்னை என்று போற்றுகிறோம்.

இங்கு இந்துக்களின் கால அளவை முறைகளைச் சிறிது ஆராயலாம்.

அது உலகிலேயே மிகப் பழமையான முறைகளில் ஒன்று நட்சத்திரங்கள் கிரகங்கள், சந்திரன், சூரியன் இவற்றின் வானவெளிப் பயணத்தை அடிப்படையாகக் கொண்டு காலத்தை நிர்ணயம் செய்வதற்கெனத் தோன்றியதே ஜோதிடம் எனப்படும் வானவியல் கலை.

அது வேகத்தின் ஒரு பகுதியாக (வேதாங்கமாக) ஏறகப்படுகிறது. யாகங்கள் போன்ற சமயச் சடங்குகள் குறித்த காலங்களில் நடப்பத்றகுத் தேவைப்பட்டதால் அப்படி ஏற்கப்பட்டது

காலப்போக்கில் ஆண்டுகளைக் கணக்கிடுவதில் இடத்திற்கு இடம் காலத்திற்குக் காலம் வேறுபாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றின. நம் நாட்டில் சுமார் 30-35 விதமான புத்தாண்டுகள் புழக்கததில் இருந்தன.

எனினும் தற்போது பரவலாகக் கையாளப்படும் ஆண்டுக் கணக்குகள் ஐரோப்பிய முறையான கிரகோரியன் காலண்டர் எனப்படும் முறையும் விக்ரம, சக, கொல்லம், ஹிஜ்ரி(முஸ்லிம்) யஸ்தேஜர்தி (பார்சி) புத்த, மகாவீர சகாப்தங்களும் புழக்கத்தில் உள்ளன.

கடந்த சில நூற்றாண்டுகளாக நாம் நமது கால அளவை முறைகளைப் பெரும்பாலும் கைவிட்டு ஐரோப்பிய முறையில் புத்தாண்டையும் (ஜனவரி1), வார விடுமுறை(ஞாயிறு) நாளையும் ஏற்றுக் கொண்டாலுழ முற்றிலும் நமது பாரம்பரியத்தைக் கைவிடவும் இல்லை.

முன்பு ஞாயிறு வார விடுமுறைக்குப் பதில் பிரதமை, அஷ்டமி(இரு பட்சங்களிலும்) விடுமுறைகளாக இருந்தன.

பண்டிகைகள், விழாக்கள் இன்றும் முன்போலவே நட்சத்திரங்கள், திதிகள் அல்லது சூரியன் ராசி மாறும் காலமாகிய சங்க்ராந்திகள் அடிப்படையிலேயே கொண்டாடப்படுகின்றன.

உதாரணமாக ஓணம், மாசி மகம், கோகுலாஷ்டமி, யுகாதி, மகர சங்க்ராந்தி (தைப் பிறப்பு), மேஷ சங்க்ராந்தி (தமிழ்ப் புத்தாண்டு) முதலியன்.

சூரியனின் சஞ்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட சௌரமான முறைப்படி, சூரியன் மேஷம் முதல் பன்னிரு ராசிகள் ஒவ்வொன்றிலும் சஞ்சரிக்கும காலம் ஒரு மாதம் (30 - 31நாட்கள்)

சந்திரனை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடும் சாந்திரமான முறையில் வளர்பிறை தேய்பிறை இருபட்சங்களைக் கொண்ட ஒரு மாதமாகக் கொள்ளப்படுகிறது (29-30 நாட்கள்) வளர்பிறை பிரதமை முதல் அடுத்த அமாவாசை வரை ஒரு மாதமாகக் கொள்வர்.

தமிழகம், கேரளம், ஓரிசா, வங்காளம், அசாம், பஞ்சாப் தவிர மற்ற பிரதேசங்களில் சாந்திரமான முறையே பின்பற்றப்படுகிறது. இம்முறையில் ஒரு மாதத்திற்கு சௌரமான முறையைவிடக் குறைவான நாட்களே உள்ளதால் இக்குறையை ஈடு செய்ய சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளுக்கு ஒரு முறை விடுபட்ட நாட்களை அதிக மாதமாகக் கணக்கிடப்படுகிறது.

ஒவ்வொரு சாந்திரமான மாதத்திலும் பௌர்ணமி எந்த நட்சத்திரத்தில் வருகிறதோ அதன்படி அம்மாதம் அழைக்கப்படுகிறது. உதாரணமாக சித்திரையில் பௌர்ணமி சித்திரை நட்சத்திரத்தில் வரும்.

புத்தாண்டு தினம் தமிழ்நாடு, வங்காளம், பஞ்சாப், கேரளா ஆகிய மாநிலங்களில் பெரும்பாலும் மேஷ சங்க்ராந்தி அன்று (ஏப்ரல் 14) வரும்.

தொன்மையான இந்துக்களின் காலக்கணக்குப்படி ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு பெயர் உண்டு. இவ்வாண்டுச் சக்கரம் 60 ஆண்டுகள் கொண்டது 'பிரபவ' முதல் 60-வது ஆண்டான 'அட்சய' வில் முடிந்து மீண்டும் பிரபவ எனத் தொடங்கும்.

ஓர் ஆண்டு ஆறு பருவங்களைக் கொண்டது தட்பவெப்ப நிலைகளின் அடிப்படையில் இளவேனில், முது வேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனிக் காலங்கள் (வசந்தம், கிரீஷ்மம், வர்ஷம், சரத், ஹேமந்தம், சிசிரம்) எனப் பிரிக்கப்பட்டுள்ளது.

**பஞ்சாங்கம்** : இந்து சமூக, கலாசார வாழ்க்கையில் பஞ்சாங்கத்திற்கு ஒரு முக்கிய இடம் உண்டு. இது ஐந்து அங்கங்களைக் கொண்டது.

1. திதி (சந்திரனின் தேய்தல், வளர் தலைக் குறிக்கும்).
2. வாரம்(கிழமை) 3. நட்சத்திரம் (சந்திரன் சஞ்சரிக்கும் நட்சத்திரத்தைக் குறிக்கும்) 4. யோகம் - ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து சூரியனும் சந்திரனும் கடந்த தூரம் (காலம் என்பது நீள, அகலம் போல் ஒரு நான்காவது பரிமாணம் எனும் ஐன்ஸ்டீனின் சித்தாந்தத்திற்கு (Theory of Relativity) முன்னோடிகள் இந்தியர்கள் தானோ?) 5. கரணம் (திதியில் பாதி)

ஆதாரம் : SIDH, Mussoorie

➤ உணர்வே வாழ்க்கை உயிர், வலிமை அதில்லாமல் எவ்வளவு தீவிரமாக முயற்சித்தாலும் கடவுளை அடைய முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனைத் தேடி....

விசு — ③



ஒரு யுகத்தின் முடிவில் உலகம் முழுமையாக அழித்து விடும் அங்கு சாம்பலும் மிஞ்சாது இச் செயல் கலியுக முடிவில் நடக்க கூடிய வாய்ப்பு உள்ளதாக மகரிஷிகள், மெய் ஞானிகள் கூறியுள்ளார்கள்.

இந்த உண்மையினை உணராத மனிதர்கள் தமது உடல் ஆனது போக்கின் வழி செல்கின்றார்கள் இந் நிலையில் இறைவன் எங்கு உள்ளார் எங்கு வியாவித்து இருக்கின்றார். என்ற கேள்விகளும் எழுகின்றது.

இறைவன் சத்திய இருளாக இருந்த காலத்தில் அங்கு அருளிய இரு அரிய சத்திகள் எமது கற்பனைக்கு எட்டாதவைகள். ஆங்கிலத்தில் Gravitation Forces எனவும் இதில் ஒன்று Negative Force ஆகும் இது தள்ளும் ஆற்றல் உடையது. மற்றதான Positive Forces ஈர்க்கும் ஆற்றல் உடையது என்றும் கூறப்படுகின்றது.

இந்த இரு சக்திகள் ஒன்றை ஒன்று ஈர்த்து வட்ட வடிவில் சுழறுகின்றது இதன் வேகத்தை அளவிடமுடியாது. இப்படி சொல்லி விட்டால் இறைவனை ஒரு விஞ்ஞானப் பொருள் என்றோ அல்லது மகாசக்தி கொண்ட விஞ்ஞானி என்றோ பெயரிட்டு விடுவார்கள்

இன்றைய விஞ்ஞானிகள் இதன் வேகத்தையும் அதனுடைய ஆற்றலையும் தெரிந்து கொளள முற்பட்டுள்ளனர். ஆனால் இது வெற்றி அடையாத முயற்சியே

இதனுள் மறைந்து நிற்பது ஒலி, ஒளி, இருள் அத்துடன் ஓங்கார அதிர்வு இணைந்து ஓங்கார ஓசை ஆகும். இது வினாயகம் என்பது சரியானது. சத்தியத்தில் நிலையாக நிற்பது இருள் அதாவது இதுவே வைரவர் என்பர்.

திருவண்டப் பகுதி பாடல்கள் 64 தனில் 'குவளைக் கண்ணி' கூறலும் 65 தனில் 'வவளுந் தாணு முடனே' என்பதையும் உட்புகுந்து அறிதல் வேண்டும். அதாவது குவளைப்பூவை யொத்த கண்களையுடைய அம்பிகையின் பாகன் சிவன்.

அவர்கள் இருவரும் ரூபத்தில் ஒன்றே. சக்திக்கும் சிவத்திற்கும் உள்ள தொடர்பு எது வெனில் சிவமே சக்தி. சக்தியே சிவம். இதனையே சிவ சக்தி என்பர். இவை இரண்டையும் பிரிக்கவே முடியாது

- தொடரும் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலி எலியாகவே மாறியது!

குறுங்கதை



ஒரு ரிஷி கங்கையில் நீராடிவிட்டு வரும் வழியில் கழுகு ஒன்று அவரின் அருகில் ஒரு பெண் சுண்டெலியை விட்டுச் சென்றது.

ரிஷி அந்தச் சுண்டெலியின் மீது கருணை கொண்டு அதனைத் தமது தவத்தின் மகிமையால் ஒரு பெண்குழந்தையாக மாற்றினார்.

ரிஷியின் வீட்டில் குழந்தை நன்கு வளர்ந்தாள்.

தக்க வயதில் ரிஷி பத்னி, ரிஷியிடம் மகளுக்குத் திருமணம் செய்யக் கூறினாள். ரிஷி தமது மகளுக்கு ஏற்றவனை மணமுடிக்க விரும்பி, சூரியதேவனை அழைத்து வந்தார்.

அவர் மகளிடம் உனக்கு இவரை மணக்க விருப்பமா? என்றார். அதற்கு அவள், இல்லை தந்தையே இவர் மிக உஷ்ணமானவர், இவரைவிட வலிமையானவர் வேண்டும். என்றாள்

ரிஷி சூரியனிடம், தேவனே, என்னை விட அதிக பலசாலி யார்? என்று கேட்டார்.

மழை பொழியும்போது என்னை முற்றிலும் மறைத்துவிடும் ஆற்றல் மேகங்களுக்கு உண்டு அதனால் மேகம் என்னை விடப் பலசாலி என்று கூறி சூரியதேவன் விடை பெற்றுச் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிஷி மேகதேவனை அழைத்துத் தமது மகளிடம் அவரை மணக்க விருப்பமா என்று கேட்டார். அதற்கு, அவள் மேகதேவன் ஈரமாகவும் கருப்பாகவும் இருப்பதாகக் கூறி மறுத்தாள்.

ரிஷி மேக தேவனிடம் உன்னை விட அதிக பலசாலி யார்? என்று கேட்டார்.

காற்று என்னையே தள்ளிவிடும் ஆற்றல் உடையது என்றார்.

வாயுதேவன் வந்தார். ரிஷிபுத்திரி வாயு வேறுவேறு திசையில் மாறுபட்டுக் கொண்டிருப்பவர் என்று கூறி மறுத்து விட்டாள்.

பிறகு ரிஷி வாயுவிடம் 'உங்களை விடப் பலசாலி யார்? ' என்று கேட்க மலைதான் என்னை விடப் பலசாலி. என்னால் அதனை தகர்த்தவே முடியாது' என்றார்.

பிறகு மலைராஜன் ரிஷிமுன் வந்து நின்றார். அவரைப் பார்த்து தந்தையே கல்போன்ற இதயம் கொண்டவர் இவர், மென்மையே இல்லை இவரும் வேண்டாம் என்று கூறி மறுத்தாள்

ரிஷியும் மலைராஜனிடம் உன்னைவிடப் பலசாலி யார்? என வினவினார்.

அதற்கு மலைராஜன் எலி என்னை விடப்பலசாலி அது என்னைக்கூட குடைந்து விடும் என்றார்.

உடனே ரிஷி எலியை அழைத்து வந்தார். எலியைக் கண்டதும் ரிஷிபுத்திரிக்குத் தன் உண்மையான இயல்பால் அதனுடன் சந்தோஷமாக வாழ முடியும் என்று தோன்றியது.

அதனால் தனது தந்தையிடம் தன்னை ஓர் எலியாகவே மாற்ற வேண்டினாள்.

எலி, எலியாகவே மாறியது.

**- சிறிய துன்பங்கள் பேச பெரிய துன்பங்கள் மௌனமாகின்றன -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீர முருகன்



திருமலை முத்து குமரன்
பேர் கொண்ட வேலன்
பெருக வென்று வருவோர்க்கு
வரமருளும் முருகன்
சீர் பொங்கும் எழில் கொண்ட
சிங்கார வேலன்
பார் போற்றும் முத்து
பதி கொண்ட அழகன்

தந்தைக்கு உபதேசம்
செய்திட்ட பாலன்
விந்தை பல புரிந்திட்ட
புரியாத சீலன்
ஔவைக்கு சுட்டபழம்
கொடுத்திட்ட வேலன்
குற வள்ளிக்கு மணமாலை
சூட்டிய வீரன்

முத்திக்கு வித்தான
முத்தமிழின் வேந்தன்
தித்திக்கும் திருப்புகழை
தந்திட்ட நாதன்
சக்தியைக் கொடுக்கின்ற
சஷ்டி கவச பாலன்
முத்து மணித் தேரேறி வரும்
தமிழ் மண்ணில் காவலன்

திருக்கோணமலை
முத்துக்குமாரசுவாமி
ஆலய மகா கும்பாபி
ஷேகத்தை 3.4.2016
முன்னிட்டு இக்கவிதை

- துரைமகன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இராஜ கோபுரம்

## 5

நில மட்டத்திலிருந்து வியாழ மட்டம் வரை அமைந்துள்ள வரிகள் பல பிரிவுகளைக் கொண்டுள்ளது அவை - பிரஸ்தலம், பாதவர்க்கம், அத்திடான அர்ச்சம் உபபீடம்

இவ்வியாழ மட்டத்திலிருந்து முதலாம் தளம் வரை உள்ள பிரிவுகள் பின்வரும் அமைப்புகளைக் கொண்ட தாகும் அவை - வேதியன், கண்டம், உத்தரம், எழுதகம் கபோதகம், வியாழம் தூக்கேடு கவுண்டபதமம், நிமித்தபத்மம், பண்டிகை, மணிக்கூடு, கண்ணாடிச்சட்டம், பத்மம் இவ்வாறு ஒவ்வொரு தள அமைப்புகளிலும் இவ்வமைப்புகள் காணப்படுகின்றன.

கோபுரம் நிர்மாணிக்கப்படும் போது மூன்று வாயில்கள் ஐந்து வாயில்கள், ஏழு வாயில்கள் என ஒற்றைத் தளங்கள் அடிப்படையாகக் கொண்டதாக இருக்கு வேண்டும் என்பதை சிற்ப சாஸ்திர நூல்களும் வேதாகமங்களும் விரிவாக கூறுகின்றன.

மூன்று வாயில்களைக் கொண்ட அமைப்பு கனவு, நனவு, சுமுத்தி என்னும் அகந்தைகளைக் குறிக்கும்.

ஐந்து வாயில்களைக் கொண்ட அமைப்பு மெய், வாய் கண் மூக்கு, செவி என்னும் ஐந்து பொறிகளைக் குறிப்பனவாகும். ஏழ வாயில்களைக் கொண்ட அமைப்பு ஐம்பொறிகள் மனம், புத்தி, என்பவற்றைக் குறிக்கும்.

வாயில்கள் எத்தனை அமைக்கின்றனவோ அதற்குத் தக்க வகையில் சிரசாக விளங்குகின்ற கோபுரத்தின் முடிவில் கலசங்கள் அமைக்கப்பட்டு இராஜகோபுரம் நிறைவு பெறுகின்றது,

- தொடரும் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமொழிகளில் முருகன்



## - வள்ளிமைந்தன் -

முருகன் பற்றிய சுவையான சொற்றொடர்கள் பக்தர்களிடத்தில் அதிகமாகப் பயில்கின்றன. இவை பழமொழிகளைப் போலவே உள்ளன. 'யாமிருக்க பயமேன்? ' என்பது முருகன் கூற்று. 'வேலும் மயிலும் துணை', 'வேலுண்டு வினை இல்லை. வேலுண்டு பயமில்லை' முதலியவை மனதுக்கு இதந்தரும் மருந்துகள், 'கந்தசாமி எங்கள் சொந்த சாமி' என்று பக்தர்கள் முருகனிடம் சொந்தம் கொண்டாடுகின்றனர்.

முருகன் கௌமாரத்தின் தெய்வம், ஆறு சமயங்களிலும் போற்றப்படும் மேலான தெய்வம். 'சுக்குக்கு மிஞ்சிய மருந்து(ம்) இல்லை, சுப்ரமணியனுக்கு மிஞ்சிய தெய்வம் இல்லை' என்பது முருகனே பரம் பொருள் என்று நிலைநாட்டுகிறது.

முருகன், ஔவையிடம் கேட்ட 'சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? ' என்ற கேள்வி ஒரு பழமொழியாகவே மாறிவிட்டது. முருகனை 'ஞானபண்டிதன்' என எடுத்துக்காட்டுகிறது. இப்பழமொழி, பயணத்துணை: கப்பலில் நெடும்பயணம் செல்கிறவர்களுக்கு வழித்துணையாக வருபவன் முருகன். இதனை, 'செட்டி மக்கள் கப்பலுக்குச் செந்தூரன் துணை' என்ற பழிமொழி உணர்த்துகிறது. 'வழிக்குத் துணை வடிவேலே' என்றும் ஒரு பழிமொழி உண்டு.

சிக்கலில், முருகன் சக்திவேலை அம்மையிடம் பெறும் வைபவம் நடைபெறும்போது அவனது காந்த முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பி வழியும் அதிசயம் நிகழ்கிறது. இவ்வாறு சக்திவேலைப் பெற்ற அவன் திருச்செந்தூரில் சூரசம்ஹாரம் செய்கிறான். இவ்விரு நிகழ்ச்சிகளையும் இணைத்துச் 'சிக்கலில் வேல் வாங்கி, செந்தூரில் சூரசம்ஹாரம்' என்ற பழிமொழி நிளைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிடம் சரணடைந்தவர்களுக்கு முருகன் கவசக்காப்பாக விளங்குகிறான். சிந்தை நொந்தவர்களுக்கும், திக்கற்றவர்களுக்கும் முருகனைத் தவிர வேறு துணை இல்லை, 'சிந்தை நொந்தவனுக்குக் கந்தனே துணை', 'கலிக்கும் கிலிக்கும் கந்தனை எண்ணு', 'கேளற்றவருக்கு வேல்'(கலி=வறுமை; கிலி=பயம்; கேள்=உறவு).

முருகனைப் போற்றும் இலக்கியங்களைப் பற்றியும் பழமொழிகள் சில வழங்குகின்றன. 'எந்தப் புராணத்திலும் இல்லாதது கந்த புராணத்தில் இருக்கும்', இப்பழமொழி நுண்ணிய கருத்துகளின் களஞ்சியமாகக் கந்த புராணம் திகழ்வதைக் காட்டுகிறது. 'எந்தப் பொருளும் கந்த புராணத்திலே' என்ற பழிமொழியும் இதே கருத்தைக் கூறுகிறது.

இவ்வாறே திருப்புகழ் தந்த அருணகிரிநாதரின் சொல்லாற்றலைப் புகழும்வண்ணம் 'வாக்கிற்கு அருணகிரி' என்ற பழமொழியும் உள்ளது.

சில உவமைகள்: 'முருகன் மயில்மேல் உட்கார்ந்திருப்பது போல.....' எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும் என்பது கருத்து 'மயில்' என்பது அசுர மயில், மயிலான சூரபத்மன், முருகனுக்கு எப்போதாவது துன்பம் தருவானாம், ஆகவே அதன்மீது அமர்ந்துள்ள முருகன் காலை நிலத்தில் ஊன்றி வீற்றிருப்பானாம். இப்பழமொழி கிராமங்களில் உள்ளது.

இலங்கையிலுள்ள 'கதிர்காமம்' என்ற திருத்தலம் திருப்புகழ் பாடல் பெற்ற திருத்தலம், கதிர்காம முருகனைத் தரிசிக்கத் தமிழக முருக பக்தர்கள் கடல் கடந்து செல்வர் கடல் கொந்தளிப்பும், புயலும் இல்லாத காலங்களைத் தேர்ந்து கடற்பயணத்தை அவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

'காலமல்லாத காலத்தில் கப்பல் ஏறி கதிர்காமா, கதிர்காமா என்பதைப் போல...' காலமறிந்து கடமையாற்ற வேண்டும் முதலிய கருத்துகளை இது உணர்த்துகின்றது.

**சஷ்டி விரதம்** : 'சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்', சட்டியில் ஒன்று இருந்தால் அதனை அகப்பையில் அள்ள முடியும் என்பது ஒரு பொருள். (சமையல்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பழமொழி மேலும் பல கருத்துகளைக் கொண்டது. 'மூளையில் அறிவிருந்தாலே வாக்கினில் தெளிவிருக்கும்' என்பது மற்றுமொரு பொருள். (கல்வி)

'கையில் பணமிருந்தாலே செலவழிக்க முடியும்' என்பது பிறிதொரு பொருள் (பொருளாதாரம்)

'சட்டியில் = சஷ்டி திதியில்; இருந்தால் = விரதம் இருந்தால்; அகப்பையில் = கருப்பையில்; வரும் = மகப்பேறு கிட்டும்:' ஒரு பெண் சஷ்டி விரதமிருந்தால் விளையும் பயனை இப்பழமொழி மறைபொருளாகச் சுட்டும்.

தமிழின் தனிக் கடவுளாம் முருகனைக் குறித்து இத்தனை பழமொழிகளும் சொற்றொடர்களும் இருப்பதில் வியப்பில்லையே!



திருகோணமலை
சிவன் இராஜகோபுர
திருப்பணி விரைவில்
நிறைந்தேற அன்பர்கள்
தாங்களால் முடிந்த நிதி
உதவியினை
ஆலயத்தில் செலுத்தி
இராஜகோபுர
திருப்பணியில்
நீங்களும் ஒரு
பங்காளியாகுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org